**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.10/2017**

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி பி.கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நிக்சன் நியூட்டன் நியூபிகன் | மதம் | : கிறிஸ்தவர் |
| த/பெ | : தன்ராஜ் | ஜாதி | : -- |
| வயது | : 53 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் : | சுயதொழில் | வட்டம் | : திருத்தணி |

**06.08.2025**
**பி.வா.சா. 2 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள், சங்கதிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் நான் பள்ளி நடத்தி வருகிறேன். நான் அந்த பள்ளியில் எந்த பொறுப்பில் உள்ளேன் என்றால் நான் எந்த பொறுப்பிலும் இல்லை. அது எனது சொந்த பள்ளியா என்றால் இல்லை. 3 பேர் சேர்ந்து நடத்தி வருகிறோம். அவ்வாறு பள்ளியை நான் உட்பட 3 பேர் நடத்தி வருகிறோம் என்பதை காட்ட ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அரக்கோணம் திருத்தணி சாலையிலிருந்து எங்கள் பள்ளிக்கு எந்த திசையில் சென்று வருகிறோம் என்றால் அரக்கோணம் சாலையிலிருந்து மேற்கே சென்று வருகிறோம். லோகநாதன் திருமண மண்டபத்திற்கு எந்த பக்கம் எனது பள்ளி உள்ளது என்றால் தெற்கே உள்ளது.

2. எங்கள் பள்ளிக்கு வழி இருப்பதை காட்ட புல வரைபடமோ அல்லது வேறு ஆவணங்களோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் திருத்தணி நகராட்சி சாலையாக இருப்பதாக குறிப்பிட்டிருப்பதில் அவ்வாறு சாலை இருப்பதை காட்ட திருத்தணி நகராட்சியில் இருந்து ஏதேனும் ஆவணம் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. பள்ளி மாணவர்கள் வேனில் அழைத்து செல்லப்படுவதாக பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளதில் அந்த வாகனம் பற்றிய விவரம் அதில் ஏற்றப்படும் நபர்களின் கொள்ளளவு பற்றிய விவரம் சொல்ல முடியுமா என்றால் TATA Sumo, Maruti ECO ஆகும். TATA Sumo, Maruti

ECO ஆகியவை Van என்ற அமைப்பில் வராது என்றாலும் கார் என்ற அமைப்பில்தான் வரும் என்றாலும் தெரியாது.

3. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 6ல் வா.சா.ஆ 8, 9 பற்றி கூறியிருப்பதில் அதன் விவரம் சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. எனக்கு தமிழ் படிக்க தெரியாது என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 9ஐ படிக்க முடியுமா என்றால் **(வா.சா.ஆ 9 சாட்சியிடம் கொடுக்கப்பட்டது) "பார்வையில் கண்டுள்ள தங்களது கடிதத்தில் அரக்கோணம் சாலை மேற்கு பக்கம் திருத்தணி கிராமம் சர்வே எண்.301/7ல் (22 X 60) என்ற அளவில் உள்ள தங்களுக்கு சொந்தமான இடத்தில் உள் சிமெண்ட் கான்க்ரீட் அகற்ற கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி அரக்கோணம் சாலை மேற்கு பக்கம், திருத்தணி கிராமம் சர்வே எண்.301/7ல் (22 X 60) என்ற அளவில் உள்ள இடத்தில் தெற்கு பக்கத்தில் (8 X 60) அளவில் உள்ள சிமெண்ட் கான்க்ரீட் அகற்றப்பட்டது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது"** என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ 9 ஆவணத்தில் வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியம் என குறிப்பிடப்பட்டுள்ளதில் வழக்கு சொத்து நகராட்சியிடமா வாதியின் சொத்தா என்றால் நகராட்சியின் இடம்தான்.

4. நகராட்சியே வழக்கு சொத்து வாதிக்கு பாத்தியம் என சொல்லியுள்ள நிலையில் நான் எந்த அடிப்படையில் வழக்கு சொத்து நகராட்சிக்கு பாத்தியம் என சொல்கிறேன் என்றால் எனக்கு தெரியவில்லை. நாங்கள் பயன்படுத்தி வருகிறோம். சாலை அமைத்தார். பள்ளி மாணவர்கள் 10 வருடங்களாக சாலையை பயன்படுத்துவதாக சொல்வதில் சாலையின் பெயர் தெரியுமா என்றால் சாலைக்கு பெயர் இல்லை. 3, 4 பிரதிவாதிகள் மீது ஏற்கனவே வழக்கு தாக்கல் செய்ததாக சொல்லியிருப்பதில் அது என்ன வழக்கு என்றால் அது எனக்கு ஞாபகமில்லை. எந்த ஆவணமும் இல்லாமல் எனது பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களை எவ்வாறு நிரூபிக்க கோருகிறேன் என்றால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத பிரமாண வாக்குமூலம் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வாதியின் வழக்கு தீர்ப்பு செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)